இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in — நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி — murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 329 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 26 – வெள்ளிக்கிழமை 10 ஜூலை 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 329 : Thiruvalluvar Year - 2057 - Aani 26 - Friday 10 July 2026 - Dak 8 Pages ₹ 5.00


### திராவிட மாடலுக்கு அடிப்படையாகத் திகழ்ந்தவர்!

## சாதனையாளர் பனகல் அரசர் பிறந்த நாள்!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஜூலை.10-**

**திராவிட மாடலுக்கு அடிப்படையாகத் திகழ்ந்த சாதனையாளர் பனகல் அரசர் பிறந்த நாளையொட்டி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பின்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.**

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

“தேடற்கரிய ஒப்புயர்வற்ற நம தருமைத் தலைவர்” எனத் தந்தை பெரியாரால் போற்றப்பட்ட பனகல் அரசர் அவர்களின் பிறந்தநாள் இன்று!






பனகல் அரசர் குறித்த புத்தகமே முத்தமிழறிஞர் கலைஞருக்கு அரசியலில் ஆர்வத்தை விதைத்தது.

சமூகநீதியின் அடித்தளமான வகுப்புவாரி பிரதிநிதித்துவ ஆணை, இந்து சமய அறநிலையப் பாதுகாப்புச் சட்டம், பெண்களுக்கு வாக்குரிமை, மருத்துவம் பயில சமஸ்கிருதம் கட்டாயமில்லை என்ற உத்தரவு எனத் தமது ஆட்சிக்காலத்தில் அவர் செய்த சாதனைகள்தாம் நம் திராவிட மாடலுக்கு அடிப்படை!

நம் கொள்கை முன்னோர்கள் நமக்குத் பெற்றுத் தந்த உரிமைகளை உயிரெனக் காப்போம்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### கல்வி நிறுவனங்கள் – வழிபாட்டுத் தலங்களுக்கு அருகில்

## டாஸ்மாக் கடைகள் இன்னும் இயங்குகின்றன!

### தேர்தல் வாக்குறுதி என்ன ஆனது? வேடிக்கை பார்க்கும் த.வெ.க. அரசு!

**சென்னை, ஜூலை 10-**

**டிவிகே (TVK) தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியின்படி, தமிழ்நாடு முழுவதும் டாஸ்மாக் நிறுவனத்தின் 717 மதுபானக் கடைகள் மூடப்பட்டுள்ளன. ஆனால், மூடப்பட்டுள்ள கடைகள் முதலில் மூடுவதற்காக அடையாளம் காணப்பட்ட கடைகள் அல்ல என்பதே சிக்கல்.**

இதன் காரணமாக, கல்வி நிறுவனங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு அருகில் உள்ள பல டாஸ்மாக் கடைகள் இன்னும் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. வடசென்னையில் மட்டும் பள்ளிகள் மற்றும் கோயில்களிலிருந்து 500 மீட்டருக்குள் குறைந்தபட்சம் ஐந்து டாஸ்மாக் கடைகள் இயங்கி வருகின்றன.

சுங்குராம செட்டி தெருவில் உள்ள கடை எண் 111, செயிண்ட் கொலம்பாஸ் பள்ளி மற்றும் செயிண்ட் மேரிஸ் பள்ளி ஆகியவற்றிலிருந்து 200 மீட்டருக்குள் உள்ளது. கடை எண் 99, புகழ் பெற்ற காளிகாம்பாள் கோயிலிலிருந்து 150 மீட்டர் தொலைவிலேயே உள்ளது. கடை எண் 131, மண்ணடி மெட்ரோ நிலையம் அருகிலுள்ள பள்ளிவாசலுக்கு மிக அருகில் உள்ளது.

அதேபோல், கடை எண் 112, ஜார்ஜ் டவுனில் உள்ள மீசி பள்ளியிலிருந்து 300 மீட்டருக்குள் அமைந்துள்ளது. கடை எண் 134, ஜிஎம்டிடிவி (GMTTV) பள்ளியிலிருந்து 300 மீட்டர் தொலைவில் உள்ளது.

இத்தகைய விதிமீறல்கள் சென்னை நகரம் மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் பரவலாக இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தக் கடைகளை மூடுமாறு, மாவட்ட ஆட்சியர், டாஸ்மாக் மாவட்ட மேலாளர்கள் மற்றும் உள்ளூர் மக்கள் பிரதிநிதிகளிடம் குடியிருப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆரம்பத்தில், பள்ளிகள் மற்றும் கோயில்களுக்கு அருகிலுள்ள கடைகளை வேறு இடங்களுக்கு மாற்றத் திட்டமிடப்பட்டிருந்தாலும், அதில் இதுவரை எந்த முன்னேற்றமும் இல்லை.

### எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்குவதில் மட்டும் கவனம் செலுத்தாமல்

# காவிரியில் தண்ணீர் பெறுவதில் கவனம் செலுத்துங்கள்!

### த.வெ.க. அரசுக்கு – உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, ஜூலை 10-**

**“எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்குவதில் மட்டும் கவனம் செலுத்தாமல் கர்நாடகாவிடமிருந்து நமக்கு வரவேண்டிய காவிரி தண்ணீரைப் பெறுவதில் த.வெ.க. அரசு கவனம் செலுத்த வேண்டும்” என்று வலியுறுத்தி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

மேலாண்மை வாரிய உத்தரவுப்படி தமிழகத்திற்கு கர்நாடகம் ஜூன் மாதத்தில் 9.91 டி. எம்.சி. நீரும், இந்த (ஜூலை) மாதத்தில் 32 டி.எம்.சி. நீரும் தந்திருக்க வேண்டும். ஆனால் தரவில்லை.

இதுகுறித்து கர்நாடக நீர்ப் பாசனத்துறை மந்திரி ராமலிங்க ரெட்டி கூறியதாவது:-

கர்நாடகாவில் போதிய மழை இல்லாததால் அணைகள் நிரம்பவில்லை. எனவே தமிழகத்துக்கு இப்போதைக்கு நீர் தர இயலாது. தமிழகத்திற்கு நீர் தர வேண்டும் என்று காவிரி மேலாண்மை வாரியமும் எங்களுக்கு உத்தரவிடவில்லை. ஏனென்றால் கர்நாடகாவில் நீர் இல்லை என்பது அவர்களுக்கே தெரியும். நீர் திறக்க வேண்டும் என்று தமிழக அரசிடம் இருந்து கோரிக்கை வந்ததாக எனக்குத் தெரியவில்லை.

ஜூன் மற்றும் ஜூலை மாதத்தில் தமிழகத்துக்கு இவ்வளவு நீர் கர்நாடகம் தர வேண்டும் என்று சொல்லப்பட்டாலும், எங்களிடம் தருவதற்கு போதிய நீர் இல்லை. எப்போது தமிழகத்துக்கு நீர் திறக்கப்படும் என்று கேட்டால், அது மழை பெய்வதை வைத்து சொல்ல முடியும். இப்போது வரை நல்ல மழை பெய்யவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.



இதுதொடர்பாக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் கீழ்க்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

‘கர்நாடகத்தில் இருந்து காவிரி நீரைத் திறந்து விட முடியாது’ என்றும், ‘நீர் வேண்டும் என தமிழ்நாடு அரசு தரப்பில் யாரும் கேட்கவில்லை’ என்றும் அம்மாநில நீர்ப்பாசன அமைச்சர் ராமலிங்க ரெட்டி கூறியிருப்பது, நம் விவசாயிகள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

ஏற்கனவே பயிர்க்கடன் தள்ளுபடி என்ற பெயரில் விவசாயிகளை ஏமாற்றிய முதலமைச்சர், கர்நாடக அமைச்சரின் இந்தப்பேச்சுக்கு என்ன பதில் வைத்திருக்கிறார்?

கழகத்தலைவர் அவர்களின் ஆட்சிக்காலத்தில், கடந்த 5 ஆண்டுகள் முழுவதும், சரியாக ஜூன் 12 அன்று மேட்டூர் அணையில் இருந்து குறுவை சாகுபடிக்காக தண்ணீர் திறந்து விடப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு இன்று வரை மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

மேகதாது அணைக் கட்டும் கர்நாடகத்தின் முயற்சிக்கு எதிராக தமிழ்நாடு சட்டப்பேரவையில் சமீபத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது, அந்தத் தீர்மானத்தைத் தமிழ்நாட்டின் அனைத்துக் கட்சிப்பிரதிநிதிகளும் ஒன்றாகச் சென்று ஒன்றிய அரசிடம் வழங்க வேண்டும் என்று கூறியிருந்தேன்.

காவிரி மேலாண்மை வாரியத்தின் தீர்ப்பின்படி, ஜூன் மாதம் வழங்க வேண்டிய 9.91 TMC தண்ணீரை கர்நாடகம் திறக்காதது குறித்தும் பேசி இருந்தேன்.

இதற்கெல்லாம் முதலமைச்சர் பதில் ஏதும் சொல்லாத நிலையில், தற்போது ஜூலை மாதம் தர வேண்டிய 32 TMC தண்ணீரையும் கர்நாடகம் தர மறுக்கிறது.

ஆளுங்கட்சியுடன் திடீர் கூட்டணி அமைத்திருக்கும் கட்சியின் ஆட்சி நடைபெறும் கர்நாடகத்திடம் இருந்து, தமிழ்நாட்டுக்குச் சேர வேண்டிய தண்ணீரை முதலமைச்சர் கேட்டுப்பெற வேண்டும்.

எம்.எல்.ஏ.க்களை வாங்குவதில் மட்டும் கவனம் செலுத்தாமல், கர்நாடகாவிடம் இருந்து நமக்கு வர வேண்டிய தண்ணீரை வாங்குவதில் கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு அப்பதிவில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### தமிழக அரசுப் பேருந்துகளில்

## ‘மகளிர் விடியல் பயணம்’ திட்டத்தில் ‘விடியல்’ நீக்கம்!

*நாகர்கோவில், ஜூலை 10-*

தமிழகத்தில் ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து, அரசுப் பேருந்துகளில் மகளிருக்கான இலவசப் பயணத் திட்டத்தின் பெயரில் முக்கிய மாற்றத்தைச் செய்து த.வெ.க. அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்படி, ‘மகளிர் விடியல் பயணம்’ என்றிருந்த பெயர் விடியல் நீக்கப்பட்டு தற்போது ‘மகளிர் பயணம்’ எனச் சுருக்கப்பட்டுள்ளது. கடந்த தி.மு.க. ஆட்சிக்காலத்தில், அரசு சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் பெண்கள், திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பொருளாதாரச் சுமையின்றி பயணம் செய்யும் வகையில் இலவசப் பயணத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்திற்கு ‘மகளிர் விடியல் பயணம்’ என்று பெயரிடப்பட்டு, பேருந்துகளின் முகப்பு மற்றும் பின்புறக் கண்ணாடிகளில் டிஸ்பிளே போர்டுகளில் அவ்வாறே காட்சிப்படுத்தப்பட்டது. பணிக்குச் செல்லும் பெண்கள், சிறு தொழில் புரியும் மகளிர் மற்றும் கல்லூரி மாணவிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள இத்திட்டம், புதிய அரசின் கீழும் எவ்வித தடையுமின்றித் தொடர்கிறது. தற்போது தமிழகத்தில் புதியதாகப் பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசு, தி.மு.க. ஆட்சிகாலத்தில் கொண்டு வரப்பட்ட திட்டங்களின் பெயர்களை மாற்றம் செய்து வருகிறது.

அந்த வரிசையில் ‘விடியல்’ என்ற வார்த்தையை நீக்கிவிட்டு, சுருக்கமாக ‘மகளிர் பயணம்’ என்று பெயர் மாற்றம் செய்துள்ளது. இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் கீழ் இயங்கும் அனைத்து மண்டலப் பேருந்துகளிலும் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

குமரி மாவட்டத்தில் செல்லும் நகரப் பேருந்துகள் வரை அனைத்திலும் பழைய ‘மகளிர் விடியல் பயணம்’ பதிவுகள் முழுமையாக அகற்றப்பட்டு வருகின்றன. அதற்குப் பதிலாக, ‘மகளிர் பயணம்’ என்று விளம்பரப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகளை விரைந்து முடிக்குமாறு அனைத்துப் போக்குவரத்துக் கழக கிளை மேலாளர்களுக்கும் தலைமை அலுவலகத்திலிருந்து அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

